[illegible]

JL
T: 3m2116,N23
N33.11.1
148783

1144

தொகுதி II. ஆவணி, 1933 சஞ்சிகை 1.

# நவீனக் கல்வி

ஈரோடு சுய நோக்க முயற்சிப் போதனு முறைப் பாடசாலை
பழைய மாணவர் சங்கத்தின் பத்திரிகை

" கற்க கசடறக் கற்பவை கற்[illegible]
நிற்க அதற்குத் தக ".

OFFICE OF THE REGISTRAR OF [illegible]
26 AUG 1933
MADRAS

வியாச அட்டவணை

முன்னுரை பத்திராதிபர்
பாடல் ... ... ஸ்ரீ K. J. வேதமுத்து.
L. M. கம்மியூனிட்டிப் பாடசாலை
யின் வரலாறு ... ... ஸ்ரீ J. T. ராஜநாயகம்.
போதனு முறை அறிவைப் புதுப்பிக்கும்
வேனிற்கால வகுப்பு ... ஸ்ரீ J. J. அனுகூலம்.
கிராமத்தில் நவீனமுறையைக் கையாண்ட
விதம் ... ... ஸ்ரீ N. சாமுவேல்.
அறிவைப் புதுப்பிக்கும் வேனிற்கால
வகுப்பு ... ... ஸ்ரீ M. ஞானமாணிக்கம்.
ஸ்ரீ T. R. நீலமேகம்பிள்ளை.
விடுமுறை நாட்களின் அலுவல்கள் ... ஸ்ரீ J. ராஜரத்தினம்.

# ஈரோடு
# லண்டன் மிஷன் போதனாமுறைப் பாடசாலையின் பழைய மாணவர் சங்கம்.

---

**I. இச்சங்கம் ஏற்படுத்தப்பட்டதின் நோக்கம்:—**

1. ஒவ்வொருவரும் தம் தம் பழைய நண்பர்களைச் சந்தித்துத் தமது பழைய சிநேகத்தை மறுமுறையும் புதிப்பித்துக்கொள்ளல்.

2. பாடசாலையின் சங்கதிகளுடன் சம்மந்தப்பட்டு அதன் சிலாக்கியங்களை அநுபவித்தல்.

3. பாடசாலையிலிருந்து வெளியேறும் அங்கத்தினர்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் களைதல்.

4. போதனாமுறையில் புதிது புதிதாக வெளிவரும் விஷயங்களை அங்கத்தினர்களுக்கு அறிவித்தல்.

5. மேற்கண்ட நோக்கங்களுக்கு அனுசரணையான காரியங்களைச்செய்தல்.

**II. இச்சங்கத்திற்குப் பின்வருபவர்கள் அங்கத்தினர்கள் ஆகலாம்.**

1. போதனாமுறைப் பாடசாலையின்பழைமாணவர்கள்.

2. பாடசாலையின் உபாத்திமார்கள்.

3. நிர்வாகக் கமிட்டியாலே கௌரவ அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள்.

**III. அன்னவர் வருஷம் 12 அணா சந்தாக் கொடுக்கவேண்டும்.**

**இந்தத் தொகையை இரண்டுபகுதியாக அதாவது ஆகஸ்டு-ஸ்ரீ 31-வுக்குள்ளும் பிப்ரவரி-ஸ்ரீ 28-வுக்குள்ளும் செலுத்த வேண்டியது.**

IV. (1) இந்தச் சங்கம் அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டியினால் நடத்தப்படும்.

பழைய மாணவர்களே! உடனே சேருங்கள்.

ாலையின

## பத்திராதிபர் முன்னுரை

---

'நவீனக் கல்வி' என்னும் இப்பத்திரிகையானது ஈ ஊள்ள லண்டன் மிஷன் சமுதாயப் போதனாமுறைப் பாட பழைய மாணவ சங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டு இச்சஞ்சிகை ஆரம்பிக்கிறது. இந்தப் பத்திரிகையின் முக்கிய நோக்கங்கள (நாச வருமாறு.

1. பாடசாலையில் படிக்கிற மாணவர்களையும் பழைய மாணவர்களையும் ஒன்றுபடுத்த வேண்டுமென்பது.

2. போதனாமுறையில், விசேஷமாகச் சுயநோக்க முயற்சிப் போதனாமுறையிலே, எழும்பிவரும் புதிய பிரயத்தனங்களை வெளிப்படுத்த வேண்டுமென்பது.

3. பற்பல பாடசாலைகளில் வேலைசெய்யும் உபாத்திமார்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்பது ஆகிய இவை பலவாம்.

இந்த நோக்கங்கள் நிறைவேறும் பொருட்டு பழைய மாணவர்களெல்லாரும் இவ்விஷயத்தில் பங்குபெறுவது அவசியமே. ஆதலால் எல்லா மாணவர்களும் பூரணமனதோடும் இம்முயற்சிக்கு உதவிசெய்து சந்தாதாராவார்கள் என்று முழு நம்பிக்கையோடும் எதிர்பார்க்கிறோம். மேலும் கல்வி விஷயமாய்த் தாங்களடைந்த அபிப்பிராயங்களைத் தெரிவிக்க விரும்புவோர் பத்திராதிபருக்கு எழுதியனுப்புவார்கள் என்றும் நம்புகிறோம். சிலர் வியாசங்களை எழுதியனுப்புவார்கள் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

இப்பத்திரிகையானது மாணவக் கூட்டத்தார் எடுத்த ஓர் புது சுயநோக்க முயற்சியென்று சொல்லலாம். ஆனதுபற்றிச் சுயநோக்க முறையைப் படித்துத் தேர்ந்த யாவரும் ஊக்கமும் விடா முயற்சியு முள்ளவர்களாய்த் தங்களால் இயன்றவளவில் உதவிபுரிவார் என்று நம்பித் தைரியங்கொண்டு இம்முதல் சஞ்சிகையை வெளியிட்டோம்.

நமது பத்திரிகையின் கட்டளை திருக்குறளில் காணப்படும் பின்வரும் சிறந்த செய்யுளில் அடங்கியது.

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக' என்பதே.

கட்டுரையின் பலனைக் காண்பிக்க ஸ்ரீ கிறிஸ்து பெருமா ஷிச் சொல்லிய வாசகம் ஏற்ற உதாரணமாம். அது பின் வருமாறு:—

பாடம் 'இயேசு ஞானத்திலும் தேக வளர்ச்சியிலும் அதி கரித்துக் கடவுளுக்கும் மனிதருக்கும் பிரியராக மென் மேலும் வளர்ந்து வந்தார்' என்பதே.

I. இத்தகைய மேனோக்கங்கொண்டு முதல் சஞ்சிகையை வெளி யிட்டோம், நமது நண்பர் யாவரும் இவ்விஷயத்தில் அதிக உதவி புரிவார் என்பது நமது நம்பிக்கை. 'நவீனக் கல்வி' என்றது பழைய மாணவர் யாவருக்கும் மிகவும் பயன்படத்தக்க ஓர் பத்திரி கையாக வேண்டுமென்று உத்தேசித்து பற்பல பிரயோஜனமுள்ள விஷயங்களை அதிலே வெளியிடத் தீர்மானஞ் செய்திருக்கின்றோம். நமது நண்பர் பலர் இவ்விஷயத்திலும் நமக்கு உதவிசெய்து அநேக வியாசங்களை எழுதியனுப்பக் கோருகிறோம்.

இத்துடன், சந்தேகங்களைக்குறித்தும் உபாத்திமைத் தொழி லின் கஷ்டங்களைக் குறித்தும் கேள்விகளை அனுப்பினால் அவை களுக்குத் தகுந்தவிடைகள் கொடுக்க ஏற்பாடு செய்வோம்.

அதுவுமின்றி அப்போதைக்கப்போது வெளிவரும் வித்தியா பிவிருத்திக்கேற்ற நூதனமுறைகளையும் சங்கதிகளையும் இப்பத் திரிகையில் தெரிவிக்குமாறு தீர்மானஞ் செய்துள்ளோம். நமது போதனமுறைகளைச் சீர்திருத்தி நடத்திக்கொள்ளத் தக்க கருவியை இப்பத்திரிகையில் கண்டுகொள்ளலாம் என்பது நமது எண்ணம்.

இந்தச் சஞ்சிகையில் வெளிப்பட்ட பழையமாணவர் சங்கத் தின் ஏற்பாடுகளைச் சந்தாதாரர் யாவரும் வாசித்துக் கவனிக்கு மாறு வேண்டுகிறோம். அவைகளுக்குத் தக்கப்படியே எல்லாரும் சந்தாத்தொகைகளைக் கிரமமாக அனுப்புவார்கள் என்று எதிர் பார்க்கிறோம். 'பழையமாணவர் சங்கம் வாழ்க!' 'நவீனக் கல்வி வாழ்க' என்று மகிழ்ந்து பாடக்கடவோம்.

148783



ஈரோடு லண்டன் மிஷன் போதனமுறைப் பாடசாலையின

விளக்க வாழ்த்துப்பா

ஆனந்தக்களிப்பு

1. நூதனமுறைப் பாடசாலை—இது
பூதலந்தன்னிலே ஆதவன் போன்று
நாதன் இயேசு அருளாலே—நாளும்
மேதக்கதாய் வாழவேண்டுவோம்—யாமே— (நூத)

2. போதனை என்பதோ கொஞ்சம்,—இதில்
சாதனையே என்றும் சாலவும் மிஞ்சும்,
ஓதலைக் கைகளால் ஆக்கிப்—பாலர்
உற்றுப் பார்த்துத் தினம் கற்றலே வேண்டும்.— (போத)

3. பிள்ளைகள் உள்ளத்தைக் கண்டு—ஆசான்
கொள்ளை கொள்ளையான பொருள்களைக் கொண்டு
தெள்ளிய ஞானத்தை உண்டு—பண்ண
துள்ளுவாரே பாலர் இது மிக நன்று— (பிள்)

4. அத்தகைப் பள்ளி ஈரோட்டில்—அழகாய்
அமைந்திருக்குமே ஓர் சிறு மேட்டில்
அன்பரே இது நம்நாட்டில்—ஓங்க
எம்பிரானைத் துதி செய்வோமே பாட்டில்— (அத்த)

5. வாழ்கப் பாடசாலை வாழ்க!—அதில்
வாசிக்கும் மாணவர் வளமாக வாழ்க!
வாழ்க ஆசிரியர் வாழ்க!—அதின்
வாழ்வு கருதும் தலைவரும் வாழ்க!— (வாழ்க)

K. J. வேதமுத்து

1133.11A

# லண்டன் மிஷன் கம்மியூனிட்டிப் பாடசாலையின் வரலாறு

J. T. ராஜநாயகம் B.A.L.T.

1926ம்-வருஷம் ஜூலை மாதம் இப்பள்ளிக்கூடம் கனம் A. W. பிரவ் துரை அவர்களால் புதிதாக ஸ்தாபனமானது. இப்பள்ளியில் கற்றுவரும் உபாத்திமை மாணவரைக் கிராமச் சீர்திருத்தம் செய்ய விசேஷமாய்ப் பயிற்றுவிக்கவே இது ஸ்தாபிக்கப்பட்டது. இவ்விசேஷ நோக்கத்தைக் கொண்டிருப்பதால் இதில் கற்பிக்கப்படும் பாட விஷயங்களும், மற்ற வேலைகளும், இதர போதனாமுறைப் பாடசாலைகளில்லாத பிரகாரம் ஒழுங்கு செய்யக் கவர்மெண்டு கல்வியிலாக்கா உத்திரவளித்தது.

இந்நூதனப் போதனாமுறைப் பாடசாலையின் கோட்பாடுகளுக்கு உதவியாய் இருக்க ஒரு உயர்தர எலிமெண்டரி பாடசாலையும் மாதிரிப் பாடசாலை ஒன்றும் இத்துடன் ஸ்தாபனமாக்கப்பட்டது. தவிரவும், குடிசைக் கைத்தொழில்களுக்கு உதவியாய் இருக்க ஒரு நெசவுசாலையும், கிருஷித்தொழிலுக்கு ஏற்ற பண்ணையும் இத்துடன் சேர்க்கப்பட்டது. இப்பாடசாலைகள் தனித் தனிமையாக நடைபெறுவதாகத் தோன்றிய போதிலும், ஒன்றுக்கொன்று அந்நியோன்ய சம்பந்தத்தையுடையதாயும், ஒன்றுக்கொன்று அனுகூலமாயும் இருந்து வருகிறது. உயர்தரப் பள்ளியில் பயிலும் பிள்ளைகள் ஓய்வு நேரங்களில் நெசவுத் தொழிலும், கிருஷித் தொழிலும் செய்யவும் கோழி தேனீக்களை வளர்த்தல், தோட்டம் போடுதல் முதலியவை கற்றுக்கொள்ளவும் வேண்டிய அவகாசம் கொடுக்கப்படுகிறது. இதில் கற்றுத் தேறும் தகுதியுள்ளவர்கள் போதனாமுறைப் பாடசாலையில் சேர்க்கப்பட்டு, நூதனமுறை உபாத்திமைத் தொழில் பயிலும்படி சமயம் கொடுக்கப்படுகிறது.

## நூதனப் போதனாமுறையின் நூதனப் பாடவிஷயங்கள்

எல்லாவிதக் கல்விக்கும் அஸ்திபாரமாய் உள்ள சுயநோக்க முயற்சி முறை என்றழைக்கப்படும் கல்விக் கோட்பாட்டுக்கு அனுசரணையான மூன்று முக்கிய பாடங்களை இம்மாணவ உபாத்திமார்கள் கற்றுவருகிறார்கள். இதில் குழந்தைகளின் மனோ சாஸ்திரத்தைப்பற்றி விசேஷமாகக் கற்றுவருகிறார்கள். இத்துடன் கிராம சீர்திருத்தத்திற்கு அனுசரணையாயுள்ள எல்லா விஷயங்களையும் கற்பதுடன், கிராமப் பள்ளிகளின் நிலைமைகளை நேரில் பார்த்துத் தக்க அனுபவமடையும்படி இப்போதனாமுறை மாணவர்களுக்குச் சவகாசமும் கொடுக்கப்படுகிறது. இவ்விதக் கிராமப் பள்ளிப் பயிற்சி இப்போதனாமுறையில் கவனிக்கப்படத்தக்க ஒரு முக்கிய விஷயம்.

இப்போதனாமுறை மாணவர் இரண்டு வருஷகாலம் இதில் பயிற்றுவிக்கப்பட்டு கவர்மெண்டாரால் அங்கீகரிக்கப்படும் ஒரு பரீட்சையில் தேறினால் இவர்களுக்கு இதர போதனாமுறையில் பயின்றுவரும் மாணவர்களைப்போல், ஒரு யோக்கியதாப்பத்திரம் கொடுப்பதுடன், தேறினவர்களின் பெயரும் கெஜட்டில் வெளியிடப்படுகிறது.

கடந்த ஏழு வருஷங்களில் இதில் தேறிப்போனவர்களின் தொகை 226. இவர்கள் சென்னை இராஜதானியின் பல பாகங்களிலும், கிராம முன்னேற்றத்திற்கேற்ற வேலைசெய்து வருகிறார்களென்று தெரியவருகிறது.

## நூதனமாதிரிப் பாடசாலையும் அதில் கற்கப்படும் நூதனக் கல்வியும்

மாதிரிப் பாடசாலையிலுள்ள முதல் ஐந்து வகுப்புகளிலும் சாதாரண எலிமெண்டரி பாடசாலைகளில் புஸ்தகத்தின் மூலமாய்க் கற்றுக் கொடுக்கப்படும், கணக்கு, வாசகம், சித்திரம், சரித்திரம் முதலிய பாடவிஷயங்களை இம்மாதிரிப் பாடசாலையிலுள்ள குழந்தைகள் சுயநோக்க முயற்சி வேலைகளின் மூலமாகச் செய்து அனுபவத்திற்குக் கொண்டுவந்து கற்று வருகிறார்கள்.

இதில் கவனிக்க வேண்டிய முக்கிய நூதன விஷயம் என்னவெனில், உபாத்தியாயரின் உதவியால், பிள்ளைகளே அவர்களின் அன்றாடக ஜீவியத்திற்குச் சம்பந்தப்பட்ட பல விளையாட்டுகளையாவது அல்லது சிறு வேலைகளையாவது தெரிந்தெடுத்து, இவ்விஷயங்கள் நடைபெறும் பொழுது இவைகளிலிருந்து இயற்கையாய் உதித்துவரும், எல்லாவிதப் பாடவிஷயங்களையும், சித்தியுடனும், மனரம்மியத்துடனும் கற்றுவருகிறார்களென்பது இப்பள்ளியின் அனுபவம். இவ்விதம் கற்கும் பாடவிஷயங்கள் பாரம்பரைப் பள்ளியில் இதே வகுப்புப் பிள்ளைகள் கற்றுவரும் பாடங்களின் அளவிலும் தன்மையிலும் குறைவானதல்ல.

இந்நூதன முறைப் பிரகாரம், சுயநோக்க முயற்சியின் மூலமாகக் கற்பதில் பிள்ளைகள் தங்கள் சிறு பருவத்திற்கேற்ற வேலைகளைச் சதா பிரியத்துடன் செய்து கற்பதுடன், இதின் மூலமாய் இவர்கள் கற்கும் பாடவிஷயங்கள் அவர்களுக்கு அர்த்தம் நிறைந்தனவாயும் இருக்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, இவர்கள் மற்ற குழந்தைகளுடன் சேர்ந்து பொதுக்காரியத்தில் ஈடுபட்டு வருவதால் குணவிஷயங்களை நல்லவிதமாக அனுபவத்திற்குக் கொண்டுவந்து விருத்திசெய்ய உபாத்தியாயர் உதவி செய்யவும் ஏதுவாய் இருக்கிறது. இவ்விதம் இப்பள்ளிக் குழந்தைகள் சிறுபருவத்திலிருந்தே ஜீவியத்தின் முக்கிய விஷயங்களை அனுபவத்தில் நன்கு உணர்ந்துவர ஏதுவாய் இருக்கிறதென்பது இப்பள்ளியின் அனுபவம்.

1926ம்-வருஷம் முதல் எட்டு வகுப்புகளில் கற்றவர்களின் தொகை நாற்பத்தைந்துதான் ஆனால், தற்சமயம் இதில் கற்றுவரும் மாணவர்களின் தொகை ஏறக்குறைய 300. இதில் எல்லா மதச் சிறுவர்களும் கற்றுவருகிறார்கள். இத்தொகையில் ஏறக்குறைய பாதிப்பேர் ஈரோடு பட்டணத்திலிருந்தும், சுற்றிலுமுள்ள கிராமங்களிலிருந்தும் வருகிறார்கள்.

இந்நூதனப் போதனாமுறைப் பாடசாலையை ஏற்படுத்திய கனம் A. W. பிரவ் துரை அவர்கள் 1933-ம் வருஷம் ஜனவரி மாதம் கனம் H. A. பாப்லி துரை அவர்களிடம் இப்பாடசாலையை ஒப்புவித்துள்ளார்.

தற்போது இப்பாடசாலை முழுப்பொறுப்பையும் எடுத்துக் கொண்ட கனம் பாப்லி துரை அவர்கள் அநேக ஆண்டுகளாகக் கிராமங்களிலே தங்கிக் கிராமவாசிகளுக்கு எவை தேவையென்பதை நன்குணர்ந்து அதற்கிணங்க மாணவர்களையும் பயிற்றுவிக்க மேலான நோக்கம் கொண்டுவந்துள்ளார். அத்துடன் மேனாடுகளில் சென்று, கிராம சேவையைச் செய்யும் சிறந்த வழிவகைகளை ஆராய்ந்து அநேக யோக்கியதாபத்திரங்களுடன் திரும்பிவந்திருக்கும் கனம் அனுகூலம் M.A.L.T. என்பவர் கனம் பாப்லி ஐயருடன் சேர்ந்து இப்பாடசாலைப் பொறுப்பை எடுத்திருப்பதால் இந்நூதனப் பாடசாலை இந்நாட்டில் சிறந்த ஓர் பாடசாலையாகுமென்பதற்கு ஐயமில்லை.

இந்நூதனப் பாடசாலை மென்மேலும் ஓங்க எல்லாம்வல்ல இறைவன் இன்னருள் சுரப்பாராக.

---

## போதனா முறை அறிவைப் புதுப்பிக்கும் வேனிற்கால வகுப்பு.

J. J. அனுகூலம் M. A. L. T.

"பாடமேறினும் ஏடது கைவிடேல்" என்று கற்றவர்களும் கற்பிக்கிறவர்களுமாகிய இந்திய ஆசிரியர்களில் ஆயிரக்கணக்கானோர் அவ்வரிய முதுமொழிக் கிணங்க நடப்பதாய்த் தோற்றவில்லை. ஏனைய விடங்களில், விசேஷமாய் மேல் நாடுகளில் ஆசிரியச் சங்கங்கள் மூலமாயும், இராஜாங்கத்தார் எடுக்கும் முயற்சிகளினாலும் கலாசாலைகளிற் செய்யப்படும் ஏற்பாடுகளினாலும் கல்வி சம்பந்தமாய் பிரசுரிக்கப்படும் பத்திரிகைகள் வாயிலாகவும் ஆங்காங்குள்ள ஆசிரியர் தம்போதனா முறை அறிவைப்புதுப்பிக்கவும் விருத்தி செய்யவும் வேண்டிய அவகாசம் கொடுக்கப்படுகிறது. இத்தகைய சிலாக்கியங்கள் நமது தேசத்தில் அவ்வளவாயில்லை என்பதும், உயர்தர ஆசிரியரைக் காட்டிலும் ஆரம்ப ஆசிரியர்கள் இக்குறைவினால் அதிகம் வருந்துகின்றனர் என்பதும் யாவருக்குந் தெரிந்த காரியமே.

இது விஷயத்தை உத்தேசித்து சென்ற ஏப்ரல் மாதம் ஈரோடு லண்டன் மிஷன் போதனாமுறைப் பாடசாலை அதிகாரிகள் "**போதனாமுறை அறிவைப்புதுப்பிக்கும் ஏற்பாடு**" ஒன்று செய்து அம்மாதம் 18ம் தேதி முதல் 28ம் தேதி வரை (ஓர் பாடசாலையை) நடத்தினர். இப்பாடசாலைக்குத் தாலுகா போர்டு, முனிசிப்பாலிட்டி, மிஷன் பாடசாலை முதலிய ஸ்தாபனங்களினின்று ஏறக்குறைய நாற்பது ஆசிரியர் வந்திருந்தனர். இவ்வேற்பாடு விசேஷமாய்ச் "சுய நோக்க முயற்சி முறை" சம்பந்தமாய் நடத்தப்பட்ட போதிலும் அம்முறையை அறியாத அநேக ஆசிரியர் அதில் சேர்ந்திருந்தனர்.

புதுப்பிக்கும் இப்பாடசாலையில் சுயநோக்க முயற்சி முறை, சிறுவர் மனோசாஸ்திரம், கணிதம், தமிழ், சன்மார்க்கப் போதனை, பூகோளம், தேகப்பியாசம், கிராம முன்னேற்றம் முதலிய பாடங்களில் உற்சாகமும் பிரயோஜனமுமான உபந்நியாசங்கள் கொடுக்கப்பட்டன. பொது அறிவு விருத்திக்கான உபந்நியாசங்கள் ஒளிச் சித்திரப் படங்கள் மூலமாய் நடந்தேறியது. கணித முறையில் பெயர் வாய்ந்த ஸ்ரீமான் ஜெகநாதன் அவர்களும், தமிழ் முறையில் கீர்த்தி பெற்ற ஸ்ரீமான் எஸ். ஜி. தானியேலும், பெருந்துறை கிராமச் சீர்திருத்தச் சங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீமான் இலக்ஷ்மணனும், கிராமப் பஞ்சாயத்து அதிகாரியான ஸ்ரீமான் கதிர்வேலு முதலியாரும், இந்த ஜில்லாவின் கல்வி உப அதிகாரியான ஸ்ரீமான் முத்துசாமி ஐயரும், ஈரோடு லண்டன் மிஷன் போதனா முறைப் பாடசாலையை நிலை நாட்டி அதைத் தென்னிந்தியாவுக்கோர் திலகமாக்கின ஸ்ரீமான் ஜே. டி. ராஜனாயகமும் அரிய உபந்நியாசங்களைச்

செய்தனர். பின்வருஞ் சஞ்சிகைகளில் ஸ்ரீமான் ஜெகநாதனுடைய முறைகளிற் சில அவைகளின் உதாரணங்களுடனும் உபகாரணங்களுடனும் பிரசிரிக்கப்படும்.

இவ்வேனிற்காலப் பாடசாலை எல்லோருக்கும் பிரயோஜனமாயிருந்தபடியாலும், சித்தியையும் மனரம்மியத்தையும் கொடுத்ததினாலும் வருஷா வருஷம் இவ்வேற்பாட்டைக்கையாள வேண்டுமென்பது இப்பாடசாலை அதிகாரிகளின் அத்தியந்த விருப்பம்.

---

## சுயநோக்க முயற்சி முறை காடுபட்டி C. S. M. கள்ளர் பள்ளிக்கூடத்தில் கையாண்ட விதமும் அதன் பலனும்.

N. சாமுவேல்,

நான் 1930-ம் வருஷம் ஏப்ரல் மீ 20உ முதல் 21-6-'33 வரை காடுப்பட்டியில் வேலை பார்த்து வந்திருக்கிறேன். நான் அப்பள்ளிக்கூடத்து வேலை ஒப்புக்கொள்ளும்போது 1—5 வகுப்புகளில் 76 மாணவர்க்கும் மூன்று உபாத்திமாரும் இருந்தார்கள். நான் அதற்குத் தலைமை உபாத்தியாயராக நியமிக்கப்பட்டேன். கட்டாயப் படிப்பின் ஆதரவின் கீழ் அப்பள்ளிக்கூடம் இருந்தபோதிலும் மாணவர் ஒழுங்காய்ப் பள்ளிக்கூடத்திற்கு வருகிறதில்லை. ஆசிரியரோ மூவர். ஆஜராயிருப்போரோ வெகு சொற்பம். இடமோ பட்டிக்காடு. நானோ கனம் ரெவ். J. ஹிம்மெல்ஸ்திராந்து அவர்கள் மூலமாய் கள்ளர் நாட்டுக்கென்று விசேஷ அழைப்புப் பெற்றவன். எனக்குக் கிடைக்கப்பட்ட உத்தரவோ, கட்டாயம் ப்ராஜக்ட் முறையைப் பள்ளிக்கூடத்தில் கையாள வேண்டுமென்பது. கனம் ராஜநாயகம் எட்மாஸ்டரவர்களிடம் நான் சொன்ன வாக்கோ, எப்படியும் ப்ராஜக்ட் முறையைப் பட்டிக்காடான கிராமத்தில் கையாண்டு பரவச்செய்வேன் என்பது. ஆகவே இந்த ஊரில் வந்து பார்க்கும்போது "வந்ததும் புதிது, உழுததும் தரிசு" என்றாற் போலிருந்தது. மாணவர் ஒழுங்காய் வருவதற்காக எத்தனையோ முயற்சி செய்தும் சிறிதும் பயன்படவில்லை. ஏனெனில் அதே ஊரில் இன்னொரு பள்ளிக்கூடமும் இருந்தது.



கடைசியாக, மாணவரை வரவழைக்க வேண்டுமென்றால் விளையாட்டுகள் தான் முக்கிய கருவி என்று நினைத்து, கனம் E.S. ஆறுமுகம் உபாத்தியாயர் அவர்கள் கற்பித்திருந்த நூதனமான விளையாட்டுகளைக் கையாண்டேன். இரண்டொரு தினத்திற்குள் சுமார் 50, 60 மாணவர்வரை ஆஜரானார்கள். என் வேலையைத் தொடங்கச் சமயம் வாய்க்கவில்லையே என்று ஆவலுடன் காத்திருந்த நான், இத்தனை பிள்ளைகளைக் கண்டதும் உடனே, என் வேலையைத் தொடங்க ஆரம்பித்து அவர்களுடன் பலவிதமான வேலைகளைப் பற்றிச் சம்பாஷித்தேன். நாலாம் ஐந்தாம் வகுப்பு மாணவர் பெரிய பையன்களாயிருந்தபடியால் அவர்களும் தங்களுக்குப் பிரியமான சில வேலைகளைப்பற்றிச் சொன்னார்கள். இச்சமயம் ஒரு பையன் பிந்தி வந்தபடியால் அவனை விசாரிக்கும்போது, தான் விதைக்கப்போயிருந்தபடியால் பிந்தி வந்தேனென்று சொல்ல, அதிலிருந்து 'விதைப்பு' என்ற விஷயத்தைக் குறித்து அவர்களோடு பேசி, கடைசியில் தோட்டவேலை செய்ய வேண்டுமென்று முடிவுசெய்து மறுநாளிலேயே அதற்கான ஏற்பாடு செய்து வேலையை ஆரம்பித்தோம்.

பள்ளிக்கூடத்தின் முன்பு பத்து செண்டு நிலம் காலியாய்க் கிடந்தபடியால் அதை வெட்டிக் கொத்திப் பயிர் செய்ய ஆரம்பித்தார்கள்.

சில பூச்செடிகளும், மருந்துப் பூண்டுகளும், நூதனமான காய்கறிச்செடிகளும் தோட்டத்தில் போடவேண்டுமென்று யோசித்து விதைகள் வாங்குவதற்காகப் பையன் ஒவ்வொருவனும் ஒரு அணா கொடுக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள். எல்லாவிஷயங்களையும் மேல்பார்த்துக் கொள்ளும்படி, உபாத்தியாயரின் உதவியினால் ஐந்தாம் வகுப்பு யோசனைசெய்து, தேவன் என்ற பையனைத் தோட்டமேல் விசாரணைக்காரனாக நியமித்தார்கள். விதை தருவிப்பதற்காக சேலம் ச. கொ. இ. அப்துல் ரகிம் சாயுபு நர்சரிக்கும், ல. மி. க. போதனாமுறைப் பாடசாலையில் கனம் ராஜநாயகம் எட்மாஸ்டர் அவர்களுக்கும், பணவுதவிக்காக உசிலம்பட்டி கனம் ஹிம்மல்ஸ்டராண்டு ஐயரவர்களுக்கும் கடிதங்கள் எழுதினார்கள். வேலை மிகவும் மும்முரமாய் நடந்தது. அத்துடன் ஷை வேலைகளிலிருந்து இயற்கையாய் உதித்து வரக்கூடியதான ஆரம்ப கல்வியையும் ஒட்டிக்கற்பவைகளையும் தீர்க்கமாய்க் கற்றார்கள். அதாவது, வேலியடைத்தல், விதை தருவித்தல் முதலியவைகளுக்கான வரிவசூலிலிருந்து கணக்கு, சிவிக்ஸ் முதலிய பாடங்களும். விதை தருவித்தல் மேனேஜரிடமிருந்து பணம் வாங்குதல், மேலதிகாரிகளுக்குத் தங்களுடைய வேலையைத்தெரியப்படுத்துதல் முதலியவைகளிலிருந்து பற்பல மாதிரிக் கடிதங்கள், விண்ணப்பங்கள் எழுதுதல், தமிழ் சிவிக்ஸ் முதலிய பாடங்களும், விதை முளைத்தலிலிருந்து, இயற்கைப்பாடம்,

ஒத்தைப் பருப்பு இரட்டைப் பருப்பு முதலிய சகல பாடங்களும் கற்று வந்தார்கள். என்றாலும் வெளிப்பார்வையில் இவர்கள் வேலை செய்கிறதும், போகிறதும் வருகிறதுமாயிருந்தபடியால் ஊரிலுள்ள பெரிய மனுஷர், மாணவரின் பெற்றோரில் சிலர், காரியக்காரர் முதலியவர்கள் உடனே என்னிடம் வந்து, "என்னையா! முன்னம் இருந்த வாத்தியாருதான் ஒரு மாதிரி. புது வாத்தியார் வந்திட்டாரு. புள்ளைகளையும் அதிகம் சேத்திட்டாரு. நல்ல படிச்சுக் கொடுப்பாரு எண்ணு இருந்தோம். என்னய்யா முன்ன இருந்ததைவிட இது மோசமாயிருக்குதே. வேலையும் விளையாட்டுமாய்த் தான் இருக்கிறதே யொழிய படிப்பு ஒண்ணையும் காணோமே. அதிலயும் ஒரு பயல் என்னமோ காடன் சூப்ரிண்டாம். என்னையா இது வேடிக்கையாயிருக்கிறதே" என்று சொன்னார்கள். உடனே நான் அவர்களைப்பக்கத்தில் உட்காரவைத்துக்கொண்டு, ப்ராஜக்ட் முறையைப் பற்றி அவர்களுக்குச் சொல்லி, மதுரையில் ஏழாம் வகுப்புப் படித்து வந்திருந்த ஒரு பையனையும், சோளவந்தான் ஹைஸ்கூலில் ஐந்தாம் வகுப்புப் படிக்கும் ஒரு பையனையும், இந்த மாணவரையும் கணக்கில் பரீட்சை செய்ததில், ப்ராஜக்ட் மாணவர் நன்றாகச்செய்ததால் இவ்விதப் படிப்பை மெச்சிக்கொண்டார்கள். என்றாலும் சிலர், 'எங்களுக்குத் தெரியாத சமுசாரி வேலையா நீங்கள் சொல்லிக்கொடுத்திடப் போறேகள். எப்படியாவது படிச்சிக் கிட்டால் சரிதான்" என்றும் சொன்னார்கள்.

இது இவ்வாறு இருக்க, அன்று இரவில் தமுக்கடித்து, ஏராளமான ஜனங்களைக் கூடிவரச் செய்து, கல்வி நாகரீகம் கிராம சீர்திருத்தவேலை ப்ராஜக்ட் முறை, முதலியவைகளைப்பற்றி கேட்போர் மனதைக் கவர்ச்சி செய்யும்படியான வழியில் உபந்நியாசித்தேன். வெகு ஆவலோடு எல்லாரும் கேட்டுக்கொண்டிருந்தார்கள். முடிவில் ஊருக்குப் பெரிய மனிதரான காரியக்காரர்களில் முத்துக் கண்ணுதேவர், வீ. இ. மாசத்தேவர் என்பவர்கள் எழும்பி, "இவ்விதமான படிப்பு இதுவரை கண்டதுமில்லை, கேட்டதுமில்லை. இதேமாதிரி நடத்தினால் பிள்ளைகள் லேசாய் முன்னுக்கு வந்துவிடுவார்கள்" என்று சொன்னார்கள். மறுநாள் முதற்கொண்டே பிள்ளைகள் ஏராளமாய் வரத்தலைப்பட்டார்கள். ஆனபடியால் என் உடன் ஆசிரியர்களும் ப்ராஜக்ட் முறையின் முக்கிய குறிப்புகளை என்னிடம் கற்றுக் கொண்டு, கால அட்டவணை பாட அட்டவணை முதலிய சகலத்தையும் மாற்றி, நாலாம், ஐந்தாம் வகுப்புகளில் தோட்ட ப்ராஜக்ட்டும், இரண்டாம், மூன்றாம் வகுப்புகளில் வாத்து வளர்க்கும் ப்ராஜக்ட்டும், முதலாம் வகுப்பில் காற்றாடிப்பட்டம் செய்யும் ப்ராஜக்ட்டும் நடத்தி, பிள்ளைகளுக்குப் பலவிதத்திலும்



148783

உற்சாகத்தை உண்டு பண்ணி, ப்ராஜக்ட்டிலிருந்து இயற்கையாய் உதித்துவரக்கூடிய பாடங்களை ஒழுங்காய் நடத்திவந்தோம்.

இப்படி இருக்குங்கால் திடீரென நிலக்கோட்டை ரேஞ்சு ம-ா-ா-ஸ்ரீ டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் பள்ளிக்கூடம் பார்வையிட வந்துவிட்டார்கள். அச்சமயம் தோட்டப் ப்ராஜக்ட் மாணவர் தோட்டத்திற்குக் கராய் வெட்ட வெளியிற் சென்றிருந்தார்கள். சில மாணவர் பட்டம் விட்டுக்கொண்டிருந்தார்கள். சிலர் வாத்துக்களுக்கு இரைபோட்டுக் கொண்டிருந்தார்கள். உடனே அவர் ரிமார்க்ஸ் புஸ்தகத்தை எடுத்து, "பள்ளிக்கூடவேலை ஒழுங்கீனமாயிருக்கிறது. ப்ராஜக்ட் வேலையை மாணவர் செய்துகொண்டிருக்கிறபடியாலும், ப்ராஜக்ட் முறையே பள்ளிக்கூடம் முழுவதிலும் கையாண்டுவருவதினாலும், வேலை இப்படிதான் முதலில் நடைபெறும் என்று தலைமை உபாத்தியாயர் சொல்லுகிறார். என்றாலும் இது பிசகு. இனிமேல் கால அட்டவணை பாடத் திட்டம் முதலியவைகளை அனுசரித்துப் பாடம் நடத்திவரவேண்டும்" என்று எழுதிவிட்டார். நான் எவ்வளவோ சொல்லியும் செவியில் புகவில்லை. பிறகு கனம் ம-ா-ா-ஸ்ரீ ராஜனாயகம் எட்மாஸ்டரவர்களுக்கு நான் இதைப்பற்றி எழுதி ஒரு பத்திரம் என்னைப்பற்றியும் என் வேலையைப்பற்றியும் எழுதி அனுப்பிய பின்னர் டிப்டி இன்ஸ்பெக்டரவர்கள் ப்ராஜக்ட் முறையை நடத்தும்படி உத்தரவளித்தார்.

பின்னர் ப்ராஜக்ட்வேலைகள் மிகவும் மும்முரமாய் நடைபெற்று வந்தன. ஏராளமான ப்ராஜக்ட்டுகளும் செய்துவந்தோம். இதைப் பார்த்த உத்தியோகஸ்தர் எங்களை பிரதம உபாத்திமார் சங்கத்தில் மாதிரிப்பாடம் கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார். நாங்களும் அதற்குச் சம்மதித்துச் செக்கானூரணிக்கள்ளர் பள்ளிக்கூடத்தில் கூட்டம் கூடினோம். ஏராளமான கள்ளர் நாட்டு உபாத்திமார்கள் கூடியிருந்தனர். ஸ்ரீமான் பீ. ஆர். அய்யாசுவாமி அய்யர் அவர்கள் அக்ராசனம் வகித்தார்கள். ரெவ். தீ. எம். ராஜேந்திரம் அவர்களும் ரெவ். தீ. ஹிம்மல்ஸ்திரண்டு அவர்களும், மதுரை ஜில்லாக் கள்ளர் பாடசாலைகளின் சூப்பர்வைஸரும் வந்திருந்தார்கள். தோட்டம் ப்ராஜக்ட்டில் 'விதைமுளைத்தல், கன்று நடுதல்' என்ற பாடம் 50 நிமிஷம் நடத்தப்பட்டது. இதிலிருந்து, தமிழ், கணக்கு, இயற்கைப் பாடம், சித்திரம் முதலிய பாடங்கள் விசேஷமாய் நடைபெற்றன. மேலும் கணக்கு, இயற்கைப் பாடம் முதலியவைகள் விசேஷமாய்க் கொண்டாடப்பட்டன. அங்குள்ள உபாத்திமாரில் சிறுபான்மையோரும்கூட எளிதில் செய்யமுடியாத கணக்குகளையும் இயற்கைப் பாடங்களையும் நாலாம் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் செய்யக் கற்றுக் கொண்டதைக் குறித்து அங்கு வந்திருந்த மேலதிகாரிகள் யாவரும்

JL
T:3 m21l6, N23 N1C
N33.1:1

ஆச்சரியப்பட்டார்கள். இத்துடன் பாடம் முடிந்ததும் அங்கு வந்திருந்த சூப்பர்வைஸர்க்கு ஒரு பையன் கடிதம் எழுதி ஒன்பது மாணவருக்கும் சாப்பாட்டுச் செலவு வாங்கினது மிகவும் மெச்சத் தக்கது.

கடைசியில் அக்ராசனர் எழுந்து "ப்ராஜக்ட்முறை என்று நான் L. T.படிக்கும்போது கேட்டிருக்கிறேன். ஆனால் இவ்வளவு தூரம் விருத்திக்கு வருமென்று எண்ணவேயில்லை. சொற்ப நாட்களுக்குள் அது எவ்வளவோ தூரம் விருத்தியடைந்திருக்கிறது. கல்வியறிவின் முதற்படியிலிருக்கும் கள்ளப் பையன்கள் இப்படி முன்னேறியிருப்பது இந்த ப்ராஜக்ட் முறையின் பெருமையே. இம்முறையைப் பல இடங்களிலும் கிராமங்களில் சுறுசுறுப்பும் ஊக்கமுமுள்ள உபாத்திமார் கையாண்டால் முன்னேற இடமுண்டு" எனக்கூறி முடித்தார்.

இது முதற் கொண்டு மாணவருக்கு முன்னிலும் அதிக உற்சாகம் உண்டானது. இதின் மூலமாய்ப் படித்த மாணவர்கள் கீழ்க்காட்டிய பலவிதமான ப்ராஜக்ட்களைச் செய்தபடியால் அவனவன் தன் தன் திறமைக்குத்தக்கப்படி, சிலர் ஜவுளி நூல் வியாபாரக்கடைகளுக்குக் கணக்குப் பிள்ளைகளாகவும், சிலர் காசுக்கடைக் கணக்குப் பிள்ளைகளாகவும், சிலர் பலடிராமாக் கம்பெனியின் சிறந்த ஆக்டர்களாகவும் போயிருக்கிறார்கள். ஆகையால் இப்பக்கத்தில் இம்முறையினால் நன்மைதான் கிடைத்திருக்கிறது. 1930 ஜூன் முதல் 1933 மார்ச்சுவரை நடத்திய ப்ராஜக்ட்கள்.

1. தோட்ட ப்ராஜக்ட்.
2. கிணறு வெட்டும் ப்ராஜக்ட்
3. வாத்து, கூஸ்வாத்து, கீரிப்பிள்ளை, முயல் முதலியன வளர்க்கும் ப்ராஜக்ட்.
4. கோவாப்பிரேட்டிவ் சம்பாஷணை ப்ராஜக்ட்.
5. போஸ் டாபீஸ் ப்ராஜக்ட்.
6. மதுவிலக்கு, நாடக ப்ராஜக்ட்.
7. சுகாதாரக் கொண்டாட்டப் ப்ராஜக்ட்.
8. பாடசாலை ஆண்டு விழா ப்ராஜக்ட்.
9. குண்டு, பட்டம், கிட்டி ப்ராஜக்ட்.
10 மீன் வேட்டை ப்ராஜக்ட்.



## போதனைமுறை அறிவைப் புதுப்பித்த வேனிற்கால வகுப்பு.

M. ஞானமாணிக்கம், ஈரோடு.

சென்ற மே-மீ 18-உ—28-உ களில் ஈரோடு லண்டன் மிஷன் கம்யூனிட்டிப் பாடசாலையில், சங்கை பாப்லி ஐயர் முதலியோரின் ஆதரவின்கீழ் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்களின் வேனிற்காலப் பாடசாலையில் பயிற்சிபெறும் சிலாக்கியம் எனக்குக் கிடைத்ததின்பேரில், உபாத்திமைத் தொழிலில் எனக்கேற்பட்ட புத்துணர்ச்சியைப் பெருமகிழ்ச்சியுடன் வெளியிட அவாவுறுகிறேன்.

தேசிய விருத்திக்கு மிகவும் ஆதாரமாயிருக்கும் ஆரம்பாசிரியர்களின் பொறுப்பு மிகவும் உன்னதமானதென்று சொல்லுவது மிகையாகாது. நம்முடைய தொழிலில் இடைக்கிடையே ஏற்படும் மலைப்புகளை விளக்கிக்கொள்வதற்கு, ஷை பாடசாலை மிகவும் உதவி செய்தது.

கல்வித்துறைகளி லீடுபட்டு நெடுங்கால அனுபவம் வாய்ந்த பெரியோர்களான கனம் S. G. டானியேல் அவர்களின் வார்த்தை முறையென்னும் தமிழ் வாசகப் பாடப்போதனைகளும், கனம் S. ஜெகநாதன் அவர்களின் கணிதப் பாடப்போதனைகளும் ஷையார்களால் தக்க உபகரணங்களைக்கொண்டு விளக்கிக் காட்டப்பட்டது. உபாத்திமைத்தொழிலில் ஆற்றலுள்ளவர்களுக்கு, சிறுவர்களைத் தனித்தனியே கல்வியில் அபிவிருத்திசெய்ய இம்முறைகள் மிகவும் சாதகமானவைகளே. உபகரணங்கள் சிக்கனமானவைகளே.

பிள்ளைகளின் சன்மார்க்க லக்ஷணங்களையும் நாடோடிய ஜீவியத்துக்கு இன்றியமையாத திறமைகளையும் விருத்திசெய்வதற்கான உபாயங்களை அறிந்த கனம் J. T. இராஜநாயகம் அவர்களாலும், வெளிநாடுகளுக்கெல்லாம் சென்று ஆரம்பக் கல்வியின் சீர்திருத்தங்களையும், குழந்தைகள் மனோதத்துவ சாஸ்திரங்களை யொட்டிக் கையாளத்தக்க முறைகளையும் கற்றுவந்த கனம் J. J. அனுகூலம் அவர்களாலும் ப்ராஜக்ட் முறை என்னும் நூதனமுறைக் கல்வியின் அந்தரங்கங்கள் மிகத் தெளிவான முறைகளில் உபந்நியசிக்கப்பட்டது. இவை ஷை முறைகளின் திட்ட வட்டத்தை உணர்த்திக்காட்டிற்று.

ஆத்மீக ஆகாரப் பயிற்சியளித்த சங்கை பாப்லி ஐயரவர்களையும் ஆரம்ப ஆசிரியர்களின் கடமைகளை நன்கு உணர்த்திக்காட்டிய ஈரோடு ரேஞ்சுப் பாடசாலைகளின் தலைவரான கனம் P. முத்துச்சாமி அய்யரவர்களையும் நாம் என்றும் மறக்கலொண்ணாது.

ஷையார்களின் அரிய போதனைகளை எம்போன்ற ஆசிரியர்கள் அனுபவத்திற்கொண்டு செலுத்துவதின் மூலம் அன்னார்களையும் சிறுவர்களையும் திருப்திபண்ணக் கூடுமென்பதே எமது துணிபு.

ஷையார்கள் இதுபோன்ற அநேக சந்தர்ப்பங்களில் அநேகாசிரியர்களுக்குப் பயன்படும்படியாக இறைவனை வேண்டுகிறோம்.

## போதனாமுறை அறிவைப் புதுப்பிக்கும் வேனிற்கால வகுப்பு.

**T. R. நீலமேகம் பிள்ளை**

ஈரோடு லண்டன்மிஷன் கம்யூனிட்டிப் போதனாமுறைப் பாடசாலைக் கட்டடத்தில் 1933௵ ஏப்ரல்௴ 18-௳ முதல் 28-௳ முடிய ரெவரண்ட் பாப்லி துரையவர்களின் ஆதரவின் கீழும், தன்னலம் பாராது பிறர் நலத்தையே நாடி வாழும் கல்வியில் மிக்க பெரியார்களின் பேருதவியினாலும் ஒரு வேனிற்காலப் பாடசாலை நிகழ்ந்தது.

அதன் உள்ளான நோக்கம் யாதெனில் மேற்படிப் போதனாமுறைப் பாடசாலையில் பயின்று வெளியேற ஆரம்பாசிரியராக விளங்கும் தோழர்களுக்குத் தாங்கள் பயின்ற முறையில் ஊக்கமும் உற்சாகமும் குன்றாதபடி அன்னவர்களுக்கு புத்துயிர் கொடுப்பதேயாகும்.

அவ்வமயம் திருவாளர் S. G. தானியேல் அவர்கள் நம் நாட்டுப்பாலர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கும் முறையைத் தாம் பிரசுரித்துள்ள முதற் புத்தகத்தின் மூலமாகவும், அதற்கு வேண்டிய உபகரணங்களைக்கொண்டும் தெளிவுற விளக்கியும் ஒளிச் சித்திரப் படங்களாலும் கற்பிக்கும் முறையைக் காண்பித்தார். மேலும், கல்வி வாசனையே இல்லாத முதியோர்களாகிய ஒட்டர்களில் சிலரை அழைத்து வந்து அம்மக்களுக்கு எழுத்துக்களைக் கற்பித்து வாசிக்கவும் எழுதவும் பழக்கினார்.

சைதாப்பேட்டை கவர்ண்மெண்ட் காலேஜில் கிண்டர்கார்டன் ஆசிரியத் திலகராக விளங்கும் ஸ்ரீமான் ஜெகநாதன் அவர்கள் தமது சிரமத்தைக்கூட கவனியாமல் நம் கையில் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்களுக்குக் கணிதம் போதிக்கும் வகை வழியைத் தகுந்த உபகரணங்களால் விளக்கியும், அந்த உபகரணங்களை எல்லாம் தாம் எளிதாகச் சேகரித்த விதத்தையும், ஆரம்ப ஆசிரியர் ஒவ்வொருவரும் அவ்வழியைப் பின்பற்றி நடக்கவேண்டுமென்றும் வற்புறுத்தினார்.

லண்டன்மிஷன் போதனாமுறைப் பாடசாலையின் ஆரம்ப கர்த்தாவகிய திருவாளர் J. T. ராஜநாயகம் அவர்கள் ப்ராஜெக்ட் முறையைப்பற்றியும் திருவாளர் அனுகூலம் அவர்கள் குழந்தைகளின் மனோதத்துவ சாஸ்திரத்தைப்பற்றியும் ஒவ்வொரு நாளும் பிரசங்கஞ் செய்தனர்.

திருவாளர் அனுகூலம் அவர்கள் எலிமெண்டரிப் பாடசாலையில் பூகோளம் கற்பிக்கு முறையைத் தெளிவாக எடுத்துச்சொல்லி ஒவ்வொரு விஷயத்தையும் காரண காரியங்களோடு ஒப்பிட்டுக்காட்டி போதிக்கவேண்டும் என்பதை விவரித்துக் கூறினார்.

"நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கிணங்கச் சிறுவர்களுக்கும், பெரியோர்களுக்கும் உடற்பயிற்சி அவசியம் என்பதை ஒட்டி, இப்பாடசாலையின் உடற்பயிற்சி ஆசிரியர்



ஸ்ரீமான் ஆறுமுகம் அவர்கள் சிறுவர்களுக்கு உடற்பயிற்சியும் விளையாட்டும் கற்பிக்கும் முறையை ஆசிரியர்களுக்குச் செய்து காட்டினார். அவர்களையும் தம்மைப் பின் தொடரச்செய்து உற்சாகத்தை ஊட்டினார். காலை மாலை வேளைகளில் பந்து முதலிய விளையாட்டுகள் நடைபெற்றன.

திருவாளர் ஜான் ஆசிரியர் அவர்கள், 'தேனீ' 'கோழி' வளர்த்தல் ப்ராஜெக்ட்டைப்பற்றிப் பிரசங்கித்தார்.

ரெவரண்ட் பாப்லி துரையவர்கள் ஆங்கிலேயக் கனவானாயிருந்தும், இந்துப் புராணங்களிலுள்ள விஷயங்களையும், தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல் திருக்குறள் முதலிய அரிய நூல்களிலுள்ள பாக்களின் பொருள்களையும் விளக்கிக்கூறினார். அவைகளை வேதத்தோடு ஒப்பிட்டுக் காட்டி, சன்மார்க்க விஷயங்களை இளைஞர்களுக்கு போதிக்குமுறையைத் தெளிவுற எடுத்துக் காட்டியது மிகவும் வியக்கத்தக்கது.

ஈரோடு ரேஞ்சு பாடசாலைகளின் டிப்டி இன்ஸ்பெக்டர், கனம் P. முத்துசுவாமி அய்யர் அவர்கள் நவீன முறையைப்பற்றி மிகவும் சிலாகித்துப் பேசினார்.

ஈரோடு மகாஜன உயர்தரப் பாடசாலை தலைமை ஆசிரியர் திருவாளர் மீனாக்ஷிசுந்தர முதலியாரவர்கள் சரித்திரப் பாடம் கற்பிக்கு முறையைப்பற்றி ஒரு சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மேற்கூறிய பாடசாலைக்கு நவீன முறையில் பயின்ற ஆசிரியர்களும், அம்முறையில் அபிமானமுள்ள மற்ற ஆசிரிய சகோதரர்களும் வந்துள்ளார். இப்பாடசாலையைச் சிறப்பிக்கச் செய்த ஆசிரியர் ஒவ்வொருவருக்கும், ஒரு பத்திரம் வழங்கியதுடன், புகைப்படம் எடுக்கப்பட்டு தேயிலைநீருடன்கூடிய சிற்றுண்டி, பாப்லி அனுகூலம் என்ற துரைசானியம்மா மார்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.

ஆரம்ப ஆசிரியர்களின் நன்மையைக் கோரித் தங்கள் அலுவல்களையும் உடல் நலத்தையும் பொருட்படுத்தாது இங்குக் குழுமி அரிய பெரிய விஷயங்களை எடுத்துக்காட்டிய அறிவாளர்களுக்கும், இப்பாடசாலை ஒழுங்குபட நடத்துவதற்கு ஏற்ற முயற்சியும் ஊக்கமும் காட்டிய கனவான்களுக்கும் எமது நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டதோடு, நாம் அறிந்த விஷயங்களின் நன்மையை அடைய எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

148783



## விடுமுறை நாட்களின் அலுவல்கள்

J. ராஜரத்தினம் (எட்டாம் வகுப்பு).

லீவு விட்டதும் நான் ஊருக்குப் போகவில்லை. சில நாள் போடிங்கிலேயே இருந்துவிட்டேன். அதற்குப் பிறகு ஊருக்குப் போனேன். அப்போது அங்கு உபாத்தியாயர் இல்லாததினால் ஜனங்களைக் கூட்டிச்சேர்த்து ஜெபக்கூட்டம் வைத்தோம். இரண்டு நாள் கழித்து நான் என்னுடைய மாமன் ஊருக்குப் போயிருந்தேன். அங்குள்ளவர்கள் கிறிஸ்துவ மார்க்கத்தில் சேராதவர்கள். அந்தச் சமயத்தில்தான் விட்னி துரையவர்கள் அந்த ஊருக்கு வந்துக் கொண்டிருந்தார். அப்போது நானும் போயிருந்தேன். அங்குள்ளவர்களுக்கு நான் கிறிஸ்தவ மார்க்கத்தைப்பற்றியும், பரமண்டல ஜெபம், பத்துக் கட்டளை முதலியவைகளைச் சொல்லிக் கொடுத்தேன். அங்குள்ள சிறு பையன்களுக்கு எழுத்துச் சொல்லிக் கொடுத்தேன். அங்கு பள்ளிக்கூடமும் கிடையாது. ஒரு மாரியம்மன் சாவடியில் சுவரில் கரும்பலகை உண்டாக்கி கடையில்போய் சாக்பீஸ் வாங்கிவந்து எழுதிக்காட்டிக் கணக்கு 1 முதல் 100 வரைக்கும், தானியேல் முதற் புஸ்தகத்தில் 10 பாடங்களும் சொல்லிக் கொடுத்தேன். தவிர கீர்த்தனையில், (என்னை ஜீவபலியாய், ரட்சணிய மூர்த்தியே, தோத்திரம் செய்வேனே, மகனே உன் நெஞ்செனக்குத்தாராயோ) இந்நான்கு பாட்டுகளும் தங்கப்பாட்டும் படித்துக்கொடுத்தேன். அப்போது கனம் விட்னி துரையவரும், எலியா ஐயரும் வந்து பார்த்துவிட்டு மிகவும் சந்தோஷப்பட்டார்கள். பிறகு அவர்களுக்கு ஞானஸ்நானமும் கொடுத்தார்கள். அவ்வூரில் படிகிணறுதான் உண்டு. அப்போது சில வயது சென்ற பெண்கள் கிணற்றுக்குப்போய் தண்ணீர் வெளியே கொண்டுவர முடியாமலிருந்தார்கள். அப்போது நான் அவர்களுக்கு உதவிசெய்தேன். ஒருநாள் நடக்க முடியாமல் ஒருபெண் கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். அப்போது அந்தக் குத்துக்கால் ஒடிந்தது, அந்தப் பெண்ணும் கீழே விழுந்தாள். அப்போது நான் பார்த்துவிட்டு ஒடிந்த காலுக்கு வேறே சிறிய மரமொன்று வெட்டி கத்தியால் சதுரமாகச் செதுக்கி ஆசாரியிடம் போய் உளி வாங்கிவந்து துவாரம் செய்து நன்றாய் கட்டில் சேர்த்துக் கட்டிக்கொடுத்தேன். பிறகு ஒரு பெண் ஒரு எருமை மேய்த்துக்கொண்டிருந்தாள். அவள் அசந்திருக்கும் சமயத்தில் தோட்டத்துக்குள்போய் பருத்திச் செடியை தின்றுகொண்டிருந்தது. அப்போது அந்தப் பெண் அதை வெளியே விரட்டிவிடச் சொன்னாள். உடனே நான்போய் வெளியே விரட்டினேன். அப்போது காட்டுக்காரக்கவுண்டன் எருமை உள்ளுக்கு வந்தது என்று என்னை இரண்டு அடி அடித்தார். நான் அதற்கு ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்குப் போய்விட்டேன். கடைசியாக லீவு முடிந்துவிட்டது; உடனே போடிங்க்கு வந்துவிட்டேன்.

JL
T:3 M 2116, N23 N1C
W23·11·1

# ஈரோடு லண்டன் மிஷன் போதனுமுறைப் பழைய மாணவர் சங்கத்திற்கு 1933-ஆம் மார்ச்-மீ 25-உ அங்கத்தினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் கமிட்டியார்

---

1. சங்கத்தலைவர் :—மகா-ா-ா-ஸ்ரீ கனம் REV. H. A. பாப்லி துரையவர்கள்.

2. சங்கத்தின் உபதலைவர்:—மகா-ா-ா-ஸ்ரீ கனம் J. T. ராஜநாயகம் **B.A.,L.T.**, ஹெட்மாஸ்டர் அவர்கள்.

3. காரியதரிசி:—கனம் R. **வேதமுத்து.**

4. பொக்கிஷதார்:—மகா-ா-ா-ஸ்ரீ கனம் E. S. **ஆறுமுகம்.**
தேகாப்பியாச ஆசிரியர்

5. அங்கத்தினர்கள்:—

    1. கனம் P. அருளப்பன்.
    2. ,, A. சோமசுந்தரம், வெள்ளகோவில்.
    3. ,, வையாபுரி, கருங்கல்பாளையம்.
    4. ,, T. R. நீலமேகம், ஷ
    5. ,, M. ஜீவரத்தினம்.
    6. ,, K. தேவாசீர்வாதம், போத்தனூர் **L.M.S.**

---

பழைய மாணவர்களே! உடனே சேருங்கள்.

# “ நவீனக் கல்வி ”

## ஈரோடு லண்டன் மிஷன் சுயநோக்க முயற்சி போதனாமுறைப் பாடசாலையின் பத்திரிகை.

ஒரு வருஷத்திற்கு நான்குமுறை வெளிவரும்.

**ஒரு வருஷ சந்தா :—**

| | | |
|---|---|---|
| L. M. C. T. S. மெம்பர்களுக்கு | ரூ. | 0—8—0 |
| மெம்பர் அல்லாதவர்களுக்கு | ரூ. | 0–12—0 |

**தனிப்பிரதி 16 பக்கமுள்ளது :—**

| | | |
|---|---|---|
| பெம்பர்களுக்கு | ரூ. | 0— 3—0 |
| மெம்பர் அல்லாதவர்களுக்கு | ரூ. | 0—4—0 |

**பத்திராதிபர்கள் :—**

1. ம-ா-ா-ஸ்ரீ கனம் REV. H. A. பாப்லி அவர்கள்.
2. ,, ,, J. J. அனுகூலம் ,,

**பத்திரிகையின் உபகமிட்டி :—**

1. பத்திராதிபர்கள்.
2. கனம் J. T. ராஜநாயகம் அவர்கள்.
3. ,, R. வேதமுத்து ,,
4. ,, V. ஜான் ,,

Printed by D. Manickam, at Payne & Co., Mount Road, Madras.
and Published at L.M. Community School, Erode, by Rev. H. A. Popley.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |